| O.S.No. 330/2023 | PW1 : திரு. கண்ணியப்பன்<br>த/பெ. திரு. முருகேசன் | 25-03-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. என்ன வழக்கு போட்டுள்ளீர்கள் என்றால் பாகப்பிரிவினை வழக்கு போட்டுள்ளேன். எனது தாத்தா பெயர் குருசாமி. எனது தாத்தாவிற்கு முருகேசன், தேவேந்திரன் என்ற இரு ஆண் மகன்களும், மண்ணு, துலுக்கானம், பொன்னுத்தாயி, அல்லி என்ற 4 மகள்களும் வாரிசுகள் ஆவார்கள். அதில் என் தந்தை முருகேசன்தான் மூத்தவர். தேவேந்திரன் 1981–ல் இராணுவத்தில் சேர்ந்தார் என்று தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியும். அதன் சர்வே எண். 217/B2 ஆகும்.

2. வழக்கு சொத்தினை 1982–ல் தேவேந்திரன்தான் கிரையம் வாங்கினார் என்றால் இரண்டு பேரும் கூட்டுக்குடும்பமாக இருந்து தேவேந்திரன் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது. தேவேந்திரன் பெயரில் உள்ள கிரைய பத்திரத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரனம் 26 சென்ட் ஆகும். அந்த 26 சென்ட்டினை தேவேந்திரனின் மனைவி, பிள்ளைகள் அனுபவித்து வருகின்றனர் என்றால் சரியல்ல, பாகப்பிரிவினைப்படி அந்த 26 சென்ட்டினை நான்தான் அனுபவித்து வருகிறேன். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பாகப்பிரிவினை பத்திரத்தை 1995–ம் ஆண்டு தேவேந்திரன் என் தந்தைக்கு எழுதிக்கொடுத்தார்.

3. வா.சா.ஆ.2 ஒப்புதல் பத்திரத்தில் முதல் தாளானது எனது தந்தை முருகேசன் பெயரில் வாங்கியதாக உள்ளது என்றால் சரிதான். 2–வது பக்கம் இரா. நடராஜன், மாணிக்கமங்கலம் மதுரா, வேடந்தாங்கல் கிராமம்

என்பவரின் பெயரில் வாங்கப்பட்டு அது அடிக்கப்பட்டு என் தகப்பனார் பெயர் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பத்திரத்தின் முதல் பக்கம் 16-02-1995லும், பத்திரத்தின் 2வது பக்கம் 13-02-1995லும் வாங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஒப்புதல் பத்திரம் தேவேந்திரன் பெயரில் வாங்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

4. தேவேந்திரன் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார். தேவேந்திரனின் கையெழுத்தை பார்த்துள்ளீர்களா என்றால் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் தேவேந்திரனின் மிலிட்டரி சம்மந்தமான ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்து தேவேந்திரனுடையதுதான். **தேவேந்திரனின் மிலிட்டரி புத்தகம் - நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) பி.சா.ஆ.1 ஆகும்**. தேவேந்திரன் 2012-ம் ஆண்டு இறந்துவிட்டார். என்னுடைய தந்தை 2016-ம் ஆண்டு இறந்துவிட்டார்.

5. வா.சா.ஆ.2 ஆவணம் 1995-ம் ஆண்டு ஏற்பட்டுள்ள நிலையில் தேவேந்திரன் 2012-ம் ஆண்டு இறக்கும்வரையில் எனது தந்தை வழக்கு சொத்தை பொறுத்து தேவேந்திரனுக்கு எதிராக ஏதேனும் புகார் அல்லது நோட்டீஸ் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. தேவேந்திரன் இறந்து 11 ஆண்டுகள் கழித்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வழக்கு சொத்து குறித்து உண்மையில் பிரச்சனை இருந்திருந்தால் தேவேந்திரனுக்கு எதிராக என் தந்தை நடவடிக்கை எடுத்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல.

6. என் தந்தை இறந்தபிறகு வழக்கு சொத்தை பொறுத்து தேவேந்திரனின் வாரிசுகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் கொடுத்தீர்களா என்றால் இல்லை. இவ்வழக்கினை தாக்கல் செய்வதற்கு

முன்பாக சொத்தினை தேவேந்திரனின் தந்தைக்கு எழுதிக்கொடுத்தார் என்று சொல்லி தேவேந்தரனின் வாரிசுகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் கொடுத்து வழக்கு தாக்கல் செய்தீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.2ல் சாட்சி கையெழுத்து போட்டுள்ள துரைசாமி என் ஊர்க்காரார் ஆவார். அவர் புளு மையினால் வா.சா.ஆ.2-ல் கையெழுத்து போட்டுள்ளார்.

7. வா.சா.ஆ.2 ஆவணம் தேவேந்திரனால் எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் இல்லை என்றாலும், என் தந்தை துரைசாமியுடன் சேர்ந்துகொண்டு மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணம் என்றாலும் சரியல்ல. என் தந்தையும், தேவேந்திரனும் இறந்ததற்கு பிறகு அப்பாவியான 1 முதல் 3 பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிய்லல.

8. வழக்கு சொத்தினை தற்போதுவரை 1 முதல் 3 பிரதிவாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், நான் வழக்கிற்காக நாங்கள் அனுபவித்து வருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மோசடியான ஆவணத்தைக்கொண்டு எனது அப்பா பெயரில் தவறுதலாக வா.சா.ஆ.3 பட்டாவினை வாங்கியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் மோசடியான முறையில் என் தந்தை பெயரில் பட்டா வாங்கி வைத்துள்ளோம் என்று சொல்லி பிரதிவாதிகள் திருவண்ணாமலை SP அலுவலகத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த புகாரில் சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக்க சொல்லிவிட்டார்கள். தாவா சொத்து 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், சொத்தானது

அவர்களின் அனுபவத்தில்தான் உள்ளது என்றாலும், மோசடியாக உருவாக்கப்பட்ட ஆவணத்தைக் கொண்டு நாங்கள் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**